Registered as a News Papet பக்கங்கள். 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 0: (16-01-1992) வியாழக்கிழமை ஓசை: 332

## இல. வங்கி நியமனம்; இனவிகிதம் புறக்கணிப்பு

இலங்கை வங்கிநியமனங்களில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்குகொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி விடயத்தில் கடந்த ஒன்பதாம் திகதி வெளியிடப்பட்ட நாலாம்தர உத்தியோகத்தர்களுக்கான நியமனங்களில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை. இச் செயல் அரசாங்கத்தின் இன விகிதாசாரக் கொள்கையை முற்றாக மீறும் செயலாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந் நியமனப்பட்டியலின் பிரகாரம் மொத்தம் 518 நியமனங்களில் 448சிங்கள (6ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிக்கு அரசு ஆப்பு:

# யுத்தத்தை தொடரத் திட்டம்

## திடீர் சுகவீனம் சிறுமி பலி

நாவற்குளி அகதிமுகாம் சிறுமி ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக நேற்று மரணமானார். இச்சம்பவம் பற்றித் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா முயற்சிக்கு முற்றுப்புள்ளி

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சமரச முயற்சிகளுக்கு ஆப்பு வைத்து விட்டு போர் நடவடிக்கைகளை தீவிரமாக்க பிரேமதாசா அரசு முயன்று வருகிறது. சமாதானப் பாதையைக் கைவிட்டு, ஆக்கிரமிப்பு யுத்தத்தில் குதிக்க தீர்மானித்திருக்கும் அரசு தனது திட்டத்தை நியாயப்படுத்துவதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதிலும் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் பகிரங்க விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என செய்யப்பட்ட முடிவு அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டத்திற்கு வாய்ப்பூட்டு இடுவதாக அமைந்திருக்கிறது அத்துடன் திரு. தொண்டமானின் உத்தேச யாழ். வருகைக்கும், விடுதலைப்புலிகளுடன் அவர் மேற்கொள்ளவிருந்த சமாதானப்பேச்சுக்களுக்கும் தடை போடுவதாக உள்ளது.

தென்னிலங்கையில் பூதாகர வடிவம் எடுத்துள்ள சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் அழுத்தம் ஒருபுறமும், இராணுவவாதிகளின் நெருக்குதல் மறுபுறமாக எழுந்துள்ள நெருக்கடி நிலைமை காரணமாக அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி இட தீர்மானித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக அனுமதி

## 1990 இல் தகுதி பெற்றோர் மீண்டும்விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

1990ம்ஆண்டில்நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையின் பிரகாரம் பல்கலைக் கழக அனுமதி பெறத் தகுதி பெற்றவர்கள் மீண்டும் அனுமதி கோரிவிண்ணப்பிக்கலாம் என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இடம் பெயர்ந்ததனாலோ அல்லது பாடசாலை அதிபரிடம் சான்றிதழ் பெற முடியாததனாலோ அல்லது எத்தகைய வேறு எந்தக் காரணங்களினாலோ விண்ணப்பிக்க முடியாதிருந்தவர்கள் அனுமதி கோரி விண்ணப்பிக்க முடியுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது

அத்துடன் இப்போது அதிபரின் சான்றிதழ்கள் பெற முடியாதவர்கள் இவ்வாறு மனுச் செய்பவர்கள் ஏன் விண்ணப்பிக்கவில்லை என்பதனை விளக்கி சத்தியப்பத்திரம் ஒன்றை இணைத்து விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டாயாழ் வருகை ரத்து தெரிவுக் குழு தடை விதிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் அங்கத்தவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான எந்த யோசனைகளையும் பகிரங்கமாக விவாதிக்கக் கூடாது என பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதால், அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயம் கைவிடப்படலாம் என

விளக்கமளிப்பது எனத் தீர்மானித்தது என்றும்,

யோசனைபற்றி ஆராய்ந்து அறிவதற்காகவே இவர்கள் பாராளுமன்ற தெரிவுக் குழு முன் ஆஜராகுமாறு கேட்கப் பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மருத்துவபீடம் மூடப்படமாட்டாது - ஹமீத்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்படமாட்டாது என உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தை மூடும் வண்ணமோ அல்லது இடமாற்றம் செய்யும் திட்டமோ அரசாங்கத்திற்கு கிடையாது என்றும் இந்தப் பல்கலைக்கழக துறைக்கு என ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிலும் குறைப்பிருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்தில் நேற்று மட்டும் 8பேர் காயம்

வலிகாமப் பகுதியில் நேற்று நடைபெற்ற புல்வேறு விபத்துச் சம்பவங்களில் எண்மர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தைப்பொங்கல் தினமான நேற்று வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற வாகன விபத்துக்களில்லமோட்டார் சைக்கிளில் சென்ற சகோதரர்களான சித்தன்கேணியைச் சேர்ந்த இந்திரன் (21), சிவகுமார் (18) ஆகியோரும் மினிபஸ்சிலிருந்து தவறி வீழ்ந்த கருகம்

## பிரபாவின் ஆவியே தொண்டமான்

## வாகனேரியில் இரு தமிழர்

# யுத்தத்தைத் தொடரத் திட்டம்

நாவற்குளி அகதி முகாம் சிறுமி ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக நேற்று மரணமானார். இச்சம்பவம் பற்றித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டா முயற்சிக்கு முற்றுப்புள்ளி

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சமரச முயற்சிகளுக்கு ஆப்பு வைத்து விட்டு போர் நடவடிக்கைகளை தீவிரமாக்க பிரேமதாசா அரசு முயன்று வருகிறது. சமாதானப் பாதையைக் கைவிட்டு, ஆக்கிரமிப்பு யுத்தத்தில் குதிக்க தீர்மானித்திருக்கும் அரசு தனது திட்டத்தை நியாயப்படுத்துவதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்குவதிலும் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் பகிரங்க விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என செய்யப்பட்ட முடிவு அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டத்திற்கு வாய்ப்பூட்டு இடுவதாக அமைந்திருக்கிறது அத்துடன் திரு. தொண்டமானின் உத்தேச யாழ். வருகைக்கும், விடுதலைப்புலிகளுடன் அவர் மேற்கொள்ளவிருந்த சமாதானப்பேச்சுக்களுக்கும் தடை போடுவதாக உள்ளது.

தென்னிலங்கையில் பூதாகர வடிவம் எடுத்துள்ள சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் அழுத்தம் ஒருபுறமும், இராணுவவாதிகளின் நெருக்குதல் மறுபுறமாக எழுந்துள்ள நெருக்கடி நிலைமை காரணமாக அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி இட தீர்மானித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக அனுமதி

# 1990 இல் தகுதி பெற்றோர் மீண்டும்விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

1990ம்ஆண்டில்நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சையின் பிரகாரம் பல்கலைக் கழக அனுமதி பெறத் தகுதி பெற்றவர்கள் மீண்டும் அனுமதி கோரிவிண்ணப்பிக்கலாம் என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இடம் பெயர்ந்ததனாலோ அல்லது பாடசாலை அதிபரிடம் சான்றிதழ் பெற முடியாததனாலோ அல்லது எத்தகைய வேறு எந்தக் காரணங்களினாலோ விண்ணப்பிக்க முடியாதிருந்தவர்கள் அனுமதி கோரி விண்ணப்பிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் இப்போது அதிபரின் சான்றிதழ்கள் பெற முடியாதவர்கள் இவ்வாறு மனுச் செய்பவர்கள் ஏன் விண்ணப்பிக்கவில்லை என்பதனை விளக்கி சத்தியப்பத்திரம் ஒன்றை இணைத்து விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொண்டாயாழ் வருகைரத்து தெரிவுக் குழு தடை விதிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் அங்கத்தவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான எந்த யோசனைகளையும் பகிரங்கமாக விவாதிக்கக் கூடாது என பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதால், அமைச்சர் தொண்டமானின் யாழ். விஜயம் கைவிடப்படலாம் என தினகரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம் கடந்த 10ஆம் திகதி கூடிய பாராளுமன்ற தெரிவுக்குழு யோசனைகளை சமர்ப்பித்த சகல கட்சிகளையும் குழுக்களையும் நேரடியாக அழைத்து அது பற்றி விளக்கமளிப்பது எனத் தீர்மானித்தது என்றும்,

யோசனைபற்றி ஆராய்ந்து அறிவதற்காகவே இவர்கள் பாராளுமன்ற தெரிவுக் குழு முன் ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரபாவின் ஆவியே தொண்டமான்

## பௌத்தபிக்கு சீற்றம்

'பிரபாகரனின் ஆவி' தான் தொண்டமான் என்றும் அவரை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றுமாறும் கம்புஹா சமா விகாராதிபதி வண கரமிட்டிப்பொல ரட்ணசார தேரோ ஜனாதிபதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மருத்துவபீடம் மூடப்படமாட்டாது - ஹமீத்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் மூடப்படமாட்டாது என உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தை மூடும் வண்ணமோ அல்லது இடமாற்றம் செய்யும் திட்டமோ அரசாங்கத்திற்கு கிடையாது என்றும்

இந்தப் பல்கலைக்கழக துறைக்கு என ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிலும் குறைப்பிருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்தில் நேற்று மட்டும் 8பேர் காயம்

வலிகாமப் பகுதியில் நேற்று நடைபெற்ற பல்வேறு விபத்துச் சம்பவங்களில் எண்மர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தைப்பொங்கல் தினமான நேற்று வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற வாகன விபத்துக்களில் மோட்டார் சைக்கிளில் சென்ற சகோதரர்களான சித்தன்கேணியைச் சேர்ந்த இந்திரன் (21), சிவகுமார் (18) ஆகியோரும் மினிபஸ்சிலிருந்து தவறி வீழ்ந்த கருகம்பானையைச் சேர்ந்த ரி. தர்மசீலன் (24) என்பவரும் தவறி வீழ்ந்ததினால் சிறீதர் (18) என்பவரும் உரும்பராயைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வாகனேரியில் இரு தமிழர் இராணுவத்தால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் இரு அப்பாவி பொதுமக்களை சுட்டுக் கொன்று அவர்களின் சடலங்களை குளத்தில் வீசிவிட்டு சென்றனர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப்பிரயோகத்துக்கு அஞ்சி அந்த இடத்திலிருந்து இடம் பெயர்ந்திருந்த மக்கள் மீண்டும் வந்தபோது இருவரினதும் சடலங்களையும் அழுகிய நிலையில் கண்டெடுத்தனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# மீனவர் மீது சூடு; இளைஞன் படுகாயம்

மீனவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனையோர் மயிரிழையில் தப்பினர். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று மாலை ஐந்து மணியளவில் கொழும்புத்துறைப் பகுதியில் கல்முனை என்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமானின் முயற்சிக்கு சுவிஸ். தூதுவர் பாராட்டு

(கொழும்பு)

ஒரு நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைவதற்கு சமாதானம் இன்றியமையாதது. வடக்கு-கிழக்குக் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்குத் திரு. தொண்டமான் எடுக்கும் முயற்சிகள் கைகூடவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

— இவ்வாறு சுவிற்ஸலாந்துத் தூதுவர் அன்ட்றீவ்கிறவ்வென்றிட் தெரிவித்தார்.

சுவிஸ்-ஆசியன் ஹோட்டல் மனேஜ்மென்ற் கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பல வகையான பண்பாட்டுக் கோலங்களையும், மதங்களையும் கொண்ட நாட்டு மக்கள் தங்கள் நாட்டில் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். சிறிலங்கா போன்ற ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்கு மக்கள் உதவ வேண்டும்

## ஆயர் இங்ஸ்லி சுவாம்பிள்ளை

இலங்கையின் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான கால கட்டம் இது. சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் சமாதானப் பணியில் தமது உழைப்பை அர்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகக் காடுகளில் தேடுதல் தீவிரம்

## அதிரடிப்படை-ராணுவம் இணைந்தது

(கொழும்பு)


மலையகத்தில் நடைபெற்று வரும் தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக பெருமளவு இராணுவத்தினர் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கே இராணுவத்தினர் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் நடாத்திய தேடுதல்களில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை, இதைத் தொடர்ந்து கடந்ததிங்கட்கிழமைபொலிஸ் மா அதிபர், கூட்டுப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள் முதலானோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

உதயத்தில்
22
—
12
—
1962



இதயத்தில்
16
—
01
—
1986

**வீரவேங்கை ரகு**
**(காசி இதயரூபன்)**


ஐயா! உன் பிரிவே தான்
ஆண்டுகள் மூவிரண்டு கடந்தாலும்
உன் மறைவு என்றும் எங்கள்
நீங்காத் துயரம் ஐயா!

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

41, இதயரூபன் விதி,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி,

(2088)

# 90-ம்நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டியும்



**நமசிவாயம் சுரேந்திரகுமார்**

பிறப்பு
07 . 08 . 1956
| | |
இறப்பு
18 . 10 . 1991

சென்ற 18-10-91இல் ஜேர்மனியில் அகால மரணமடைந்த நமசிவாயம் சுரேந்திரகுமார் அவர்களின் 90ஆம் நாள் நினைவும் அந்தியேட்டியும் இன்று 16-1-92இல் 9 ஆம் கி. மீ. போஸ்ற் உடுவில் சுன்னாகத்தில் நடைபெறும்.

ந. விஜயகுமார்
(தமையனார்)

(சி/2101)

# 6-ம் மாத நினைவலைகள்



# நல்லூர் பிரதேசத்தில் சுகாதார வாரம்

யாழ் மாநகர சபையினால் சுகாதார வாரம் கொண்டாடப்பட்ட அடிப்படையில் அடுத்ததாக நல்லூர்ப்பிரதேச சபைப் பகுதிக்குள் இவ்வாரத்தைக் கொண்டாட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று வரும் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொக்குவில் உபதபால் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோரியுள்ளார்.

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி -
யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்
கழகத்திற்கான

G, A. Q
Ist in COM.

புதிய 2 வது பிரிவு
ஆரம்பம் 18.1.92
(8மணி)

வரலாறு
நாடகமும் அரங்கியலும்
விரிவுரைகள்
ஆரம்பம் 18.1.92
(3மணி)

(சி/3787)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்

**ஆரம்ப ஆசிரியர்**

போட்டிப்
பரீட்சைக்கான

பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம் 18-1-92
(2மணி)

ஆசிரியர் - குமாரவேல்

(சி/3786)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள
நாடுங்கள்

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
**யாழ்ப்பாணம்.**

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

இ. 5

# 6-ம்ஆண்டு நினைவஞ்சலி

# முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி. பீடிகளைப் போல் ஒரு சில நபர்களால் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி. பீடிகளை விற்பனை செய்வதாக அறிய வந்துள்ளோம். அசல் ஆர் வி. ஜி. பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி. பீடி விற்பனை செய்பவர்களை இனம்கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகின்றோம். போலி பீடி விற்பனையாளர் பற்றிய


**தகுந்த தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.**

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2099)

# நினைவு கூருகின்றோம்

**1992- 01- 16**



நாதன்
(மொட்டை)

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். பப்பா 'பிலிப்ஸ்** (கிருஷ்ணர் இரகுநாதன் - காங்கேசன்துறை)
**உக்கன்** (ராஜேந்திரன் ஜெயகாந்தன் - கிளிநொச்சி)
**ரகு** (சின்னத்தம்பி இதயரூபன் - ஜெயந்திநகர். கிளிநொச்சி)

இதே சம்பவத்தில் பலியான 3 பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு கூனித்தீவில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**பிரகாஷ்** (தியாகராசா பற்குணநாதன் - 8ஆம் வட்டாரம், கூனித்தீவு, திருக்கோணமலை)


இணுவிலில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளரான

**மொட்டை நாதன்** (கனகசிங்கம் புஷ்பநாதன் புஷ்பநாதன் வீதி, இணுவில்)

கம்பர்மலை, கெருடாவில் பகுதியில் இந்தியப்

41, இதயரூபன் வீதி, பெற்றோர், சகோதரர்கள்,
ஜெயந்தி நகர், உறவினர், நண்பர்கள்.
கிளிநொச்சி, (2088)

## 90-ம்நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டியும்



நமசிவாயம்
சுரேந்திரகுமார்

பிறப்பு
07 . 08 . 1956

இறப்பு
18 . 10 . 1991

சென்ற 18-10-91இல் ஜேர்மனியில் அகால மரணமடைந்த நமசிவாயம் சுரேந்திரகுமார் அவர்களின் 90ஆம் நாள் நினைவும் அந்தியேட்டியும் இன்று 16-1-92இல் 9 ஆம் கி. மீ. போஸ்ற் உடுவில் சுன்னாகத்தில் நடைபெறும்.

ந. விஜயகுமார்
(தமையனார்)

(சி/2101)

## 6-ம் மாத நினைவலைகள்



வீரப்பிறப்பு
02-05-1973

வீரச்சாவு
16-07-1991

### வீரவேங்கை மூர்த்தி
### (தம்பிராஜா அனிதராஜா)

எமது மண்ணில் காலடி வைக்காது
எதிரியுடன் தீரமுடன் போராடி
வீரச்சாவு எய்திய மூர்த்தியே
உன் கனவை ஒருநாள் நனவாக்குவோம்
மணலாறு மண்ணில் மாவீரன் ஆகிய
எங்கள் செல்வமே நீ விட்ட
பணியை நாம் தொடர்கின்றோம்.

இன்று (16-01-1992) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியை வைபவத்தில் நண்பர்கள். உறவினர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராத்துப்பளை, குடும்பத்தினர்,
பருத்தித்துறை. (சி/3781) நண்பர்கள்.

ஆரம்பம் 18.1.92
(8மணி)
வரலாறு
நாடகமும் அரங்கியலும்
விரிவுரைகள்
ஆரம்பம் 18.1.92
(3மணி)
(சி/3787)

பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம் 18-1-92
(2மணி)
ஆசிரியர் - குமாரவேல்
(சி/3786)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
**யாழ்ப்பாணம்.**

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

இ. 5

## 6-ம்ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
1963-09-21

வீரச்சாவு
1986-01-16

மாவீரன்


### 2-ம் லெப். பப்பா/பிலிப்ஸ்

[கிருஷ்ண இரகுநாதன் - காங்கேசன்துறை]
ஆறாண்டு அசைந்தும் ஆறாதுள்ளதையா உன்துயர்
மண்ணுக்காக மரணித்து மாவீரனானாய் பெருமை
கொண்டேன் உன் துயரிலும்
படித்துப்பட்டம் பெற்று பெற்ற தாய்க்கு ப்பெருமை
தேடுவாய் என நினைத்தேனன்று - அதிலும்
பெரியதாய் மண்மீட்புப் போரில் பெருவீரனானாய்
பெருமை கொண்டேன் அருமைமகனே!

- தாய்

காங்கேசன்துறை. (2102)

## 1992- 01- 16



நாதன்
(மொட்டை)

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். பப்பா/பிலிப்ஸ்** (கிருஷ்ணர் இரகுநாதன் - காங்கேசன்துறை)
**உக்கன்** (ராஜேந்திரன் ஜெயகாந்தன் - கிளிநொச்சி)
**ரகு** (சின்னத்தம்பி இதயரூபன் - ஜெயந்திநகர். கிளிநொச்சி)

இதே சம்பவத்தில் பலியான 3 பொதுமக்கள்

1988 ஆம் ஆண்டு கூனித்தீவில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

**பிரகாஷ்** (தியாகராசா பற்குணநாதன் - 8ஆம் வட்டாரம், கூனித்தீவு, திருக்கோணமலை)

இணுவிலில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளரான

**மொட்டை நாதன்** (கனகசிங்கம் புஷ்பநாதன் புஷ்பநாதன் வீதி, இணுவில்)

கம்பர்மலை, கெருடாவில் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு உடுப்பிட்டி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின் காணாமல்போன தமிழ் இளைஞன்

1991 ஆம் ஆண்டு யான் ஓயாப் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**நகுலேஸ்** (தர்மலிங்கம் கண்ணன் - திருக்கடலூர் திருக்கோணமலை)

மொனறாகலை ஆற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப்பிரிந்த அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

**மேஜர் கஸ்ரோ** (மயில்வாகனம் ரூபானந்தராசா -பொத்துவில், அம்பாறை)

**கெனிஸ்/ஜெனிஸ்** (சின்னத்தம்பி சுவேந்திரராசா -பொத்துவில், அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/3790)

# தமிழ் நாட்டில் தமிழ் கட்டாயமொழியாகிறது

(நேற்றைய தொடர்ச்சி)

### அரசியல்

திராவிட இயக்கத்தின் அரசியல் பண்பாட்டு மரபுரிமைப் பண்பை அழிப்பதற்காக ஜெயலலிதா தன்னுடைய சாதிக்காரர்களான பிராமணர்களுடன் இணைந்து செயல்படுகின்றாரென திரு. கருணாநிதி குற்றம் சுமத்தியுள்ளார். எதிரியால் கைது செய்யப்பட்டபோது தற்கொலை செய்துகொண்ட தமிழரசன் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் வீரத்தைப் பற்றித் திரு. வை. கோபாலசுவாமி நினைவூட்டியுள்ளார். (விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் அளித்ததற்காக இவரது சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளார்.) பிராமணர் அல்லாதவர்களால் அதிகமாக வாசிக்கப் படுவதும், பிராமணர் ஒருவருக்குச் சொந்தமானதுமான ஜுனியர் விகடன் பத்திரிகை பிராமணர்களை எதிர்ப்பவர்களுக்கும், பிராமணர்களை ஆதரிப்பவர்களுக்குமிடையே ஒரு விவாதத்தை ஆரம்பித்துள்ளது. திராவிடக் கொள்கை சார்புடைய எழுத்தாளர் சின்னக் குத்தூசியும், பிராமணர் சார்புடைய எழுத்தாளர் நெல்லை ஜெயமணியும் இந்த விவாதத்தை ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாசகர்களால் அனுப்பப்பட்ட இந்த விவாதத்தைப் பற்றிய அபிப்பிராயங்களை இந்த சஞ்சிகை சென்ற வாரத்திலிருந்து பிரசுரிக்கத் தொடங்கியுள்ளது. செட்டி பாளையத்தைச் சேர்ந்த வீ. தேனவன் எழுதிய அபிப்பிராயத்தில் திராவிட இயக்கம் என்பது சமுதாயத்தை மூட நம்பிக்கையிலிருந்து விடுவிக்கும் ஒரு இயக்கமாகும். கௌதம புத்தர், ஜைன சமயத்தைத் தோற்றுவித்த மகா வீரர், திருவள்ளுவர், திருஞானசம்பந்தர், சித்தர்கள், இராமலிங்க வள்ளலார், திராவிடக் கழகத்தை உருவாக்கிய பெரியார், பாவேந்தர் பாரதி தாசன் ஆகிய யாவரும் பிராமணியத்துக்கு எதிராகப் போராடியவர்களே. சமஸ்கிருதத்தைத் தமிழ் மொழியினுள் புகுத்தி தமிழ் எழுத்து முறையில் மணிப்பிரவாள நடையை உருவாக்கித் தமிழ் மொழியின் தனித்துவத்தைச் சிதைக்க முயன்றது யார்? இவர்கள் தேசிய வாதத்துக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள். கோயில் பூசகராக இருப்பதன் காரணமாக ஒரு பிராமணர் நிறைய உழைக்கின்றார் என்பதல்ல கேள்வி. ஒரு திராவிடன் பூசகராக வரமுடியுமா என்பதே கேள்வி. நான் பிராமணர்களை கேட்கின்றேன்; திராவிட இயக்கத்தின் செல்வாக்கு காரணமாக வல்லவா பிராமணர் அல்லாத காமராஜர் காங்கிரஸ் கட்சியில் எழுச்சி பெற்றதும், பிராமணரும் சென்னை மாநிலத்தில் ஹிந்தி மொழியைத் திணிப்பதற்கு முயன்ற பிராமண தேசியவாதியுமான ராஜகோபாலாச்சாரி வீழ்ச்சியுற்றதும் ஆகும்.

### காங்கிரசுக்கு எதிரானது

திராவிடக் கழகமாக மாறிய நீதிக்கட்சியை தென்னிந்திய லிபரல் பெடரேசன் (South Indian Liberal Federation) என்ற பெயரில் ஆரம்பித்த பிராமணரல்லாதவர்களும், காங்கிரசுக்கு எதிரானவர்களும், பிரித்தானியருக்கும் ஆதரவளித்தவர்களுமான சேர் தியாகராயர், திரு. ரி. எம். நாயர் ஆகியோரின் காலத்துக்கு முன்னர் அரசாங்கத்திலுள்ள எல்லா உத்தியோகங்களையும்பிராமணர்கள் வகிக்கவில்லையா? திரு, ஜெயமணி போன்றோர் இதை மறுக்க முடியுமா? திராவிடக்கழகத்தை ஆரம்பித்த பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கரின் போராட்டமே இந்தியாவிலுள்ள பின் தங்கிய மக்களுக்கு வேலை வாய்ப்பையும், கல்வி கற்கும் வாய்ப்பையும் ஒதுக்கீடு செய்யக்காரணமாக இருந்தது. தமிழர்களுக்கு தமிழ்த் தேசிய உணர்வு இருப்பதில் என்ன தவறு உண்டு எனக் கேட்டுள்ளார். திராவிடக் கோட்பாட்டையும், பண்பாட்டையும் காப்பாற்றுவதற்கோ அல்லது வளர்ப்பதற்கோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி முன்னர் உண்மையாகவும், நம்பிக்கையாகவும் நடந்து கொள்ளவில்லை என்ற உண்மையை இந்த விவாதத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. பிராமணர்களும் தமிழ்த் தேசிய வாதிகளும் இவரை பாசாங்குக்காரர் எனக்குற்றம் சுமத்தியுள்ளார்கள். தமிழ்த்தலைவர் காமராஜரைத் தோற்கடிப்பதற்குப் பிராமண குலத்தைச் சேர்ந்த இந்திரா காந்தியுடன் இவர் கூட்டுச்சேரவில்லையா? தனது மகளுக்கு இவர் இந்தி மொழியைக் கற்பிக்கவில்லையா? வள்ளுவர் கோட்டத்தைத் திறந்து வைப்பதற்கு ராகு காலம் பார்த்துச் செல்ல வில்லையா? என இவரைக் குற்றம் காண்போர் கேட்கிறார்கள். திரு. கருணாநிதி ஒரு சந்தர்ப்பவாதியென்றும் இவர் சமஸ்கிருத பண்பாட்டுக்கு எதிரான, இந்து சமயத்துக்கு எதிரான போராட்டங்களை பாதியிலேயே கைவிட்டு விடுவார் என்றும், பிராமணியத்தைத் தீவிரமாக எதிர்க்கும் தமிழ்த்தேசிய வாதிகள் கூறுகின்றார்கள். இந்துமத வெறிகொண்ட பாரதீய ஜனதாக் கட்சியும் அதன், யாவும் இந்து என்ற கோட்பாடும், தமிழ் நாட்டிலுள்ள மத்திய வகுப்பைச் சேர்ந்த பிராமணர்கள் தங்கள் பண்பாட்டையும் சமூக நலன்களையும் பாதுகாப்பதற்கும் அவற்றை வளர்த்தெடுப்பதற்கும் ஊக்கமளிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இந்து சமய நம்பிக்கைகளெல்லாம் தமிழ் மக்களை அடிமைகளாக்கப் பிராமணர்கள் கையாளும் தந்திரம் என அவைகளைக் கண்டனஞ் செய்யும் திராவிட கோட்பாட்டை இன்னும் கடைப்பிடிப் போரிடையே இது பகைமை உணர்வை ஏற்படுத்துகின்றது.

### பெரும்பான்மை

தமிழ் நாட்டிலுள்ள மத்திய வகுப்பினரிடையே ஆங்கில அறிவு உள்ளவர்களில் அதிகமானோர் பிராமணர்களாயிருப்பதுடன் அவர்களே புத்திஜீவிகளாகவும், பத்திரிகையாளர்களாகவும், மூத்த அரச ஊழியர்களாகவும் இருக்கின்றனர். (இந்தப் பிராமணரின் அபிப்பிராயங்களையே சில வேளைகளில் சிங்கள மக்கள் தமிழர்களின் அபிப்பிராயமாகக் கொள்கின்றனர்) திராவிடக் கோட்பாடுகளை வெளிப்படையாகவும், தீவிரமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே கடைப்பிடிக்கின்றதென இவர்கள் கருதுகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளால் பிராமணர்களுக்குஏற்பட்டுள்ளஅச்சுறுத்தலிலிருந்துஅவர்களைக் காப்பாற்றவேண்டிய அதே வேளையில் திரு. கருணாநிதியிலும் பார்க்கத்தான்தமிழர்களுடைய நலன்களில் அக்கறையுள்ளவர் எனக் காட்டிக் கொள்ள வேண்டிய நிலையில் செல்வி ஜெயலலிதா இருக்கின்றார். இதன் காரணமாகவே தமிழ்மொழி இவரால் கட்டாய மொழியாக்கப்பட்டது. திரவிடாஇயக்கஉறுப்பினர்கள் நெருக்கடி காரணமாக தன்னுடைய நம்பகத் தன்மையை மெய்ப்பிப்பதற்காகவே பிராமண எதிர்ப்பு முழக்கத்தை திரு. கருணாநிதி இப்போது எழுப்பிவருகின்றார். அதன் காரணமாக இந்த மாதம் புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளும் பங்கு பற்றும் தேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தை திரு. கருணாநிதி புறக்கணித்தார். திராவிடக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டும், அதைப் பேணிக் காப்பதை நோக்கமாகக் கொண்டும், தமிழீழ விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் தூயதமிழ்க் கொள்கையும், அவர்கள் நாடாத்தும் பண்பாட்டு நிகழ்ச்சிகளையும் இதன் பின்னணியில் பார்க்கப்படல் வேண்டும். ★

## விடுதலைப் புலிகளின் பண்பாடு

- தாரகி - ஐலன்ட் 24-11-1991

அச்சம்என்பது மடமையடா<br>
அஞ்சாமை திராவிடர் உரிமையடா<br>
ஆறிலும் சாவு நூறிலும் சாவு<br>
தாயகம் காப்பது கடமையடா

(இது திராவிட முன்னேற்றக் கழகம் தனிநாடு கோரிய வேளையில் எம்.ஜி ஆர் நடித்து வெளியான நாடோடி மன்னன் படத்தில் வரும் ஒரு பிரபல்யமான பாடலாகும்,

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகப் பலமிழந்து வருகிறார்கள் என்று அதிகமானமக்கள்நினைக்கும் இந்த வேளையில் அரசியல் ரீதியாக அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்வது நன்மை பயப்பதாகவிருக்கும். தங்களுக்கென ஒரு நிரந்தரமான இடத்தைப்பெறும் நோக்கில் அரசியல் ரீதியான மற்றும் பண்பாட்டு ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பரந்த தமிழ்த்தேசிய வாதம் என்ற உணர்வைத் தமிழ் மக்களிடையே விடுதலைப் புலிகள் உருவாக்கி வருகின்றார்கள். இந்தியாவினுடைய ஆதரவை இவர்கள் நிரந்தரமாகவே இழந்து விட்டார்கள். இவர்களை ஒடுக்க இந்தியா உறுதி பூண்டுள்ளது. இலங்கைத்தமிழ் மக்களுடைய உரிமைகளைக் காப்பாற்றுவதற்குத் தான் இதுவரை வகித்து வந்த நிலையிலிருந்தும் இந்தியா தன்னை விலக்கிக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து கிடைத்த பெரும் ஆதரவு தற்போது விடுதலைப் புலிகளுக்கு இல்லாமையால் அவர்கள் தங்களுக்கென ஒரு அரசியல் தளத்தைத் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

பரந்த தமிழ்த் தேசியவாதத்தை உருவாக்கும் தங்கள் முயற்சியின் பலனாகச் சிறிய பயனையே இப்பொழுது அடையத் தக்கதாயிருந்தாலும் எப்படியும் அதை உருவாக்கவே விடுதலைப் புலிகள் தீவிரமாகச் செயல்படுகிறார்கள். இந்த நோக்கத்தில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றால் அது அவர்களுக்குப் பெரிய வெற்றியாகவும் இராணுவ ரீதியாக அவர்கள் வெல்லப்பட்டாலும் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்குப் பெரிய தோல்வியாகவும் இருக்கும்.

திரு. ராஜீவ் காந்தியினதும், திரு பத்மநாபாவினதும் கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்கள் சார்பில் வாதாடுவதற்கு திராவிடக்கழகத் தலைவர் திரு. வீரமணி தீர்மானித்திருப்பது விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களுடைய பரந்த தமிழர் ஒருமைப்பாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்திய தேசியவாதிகள் எவரும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டகட்சி அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் திராவிடக் கழகத்திற்கும் எந்தவித தொடர்புமில்லை என கூறியமைக்காக அதன் தலைவர் வீரமணியைப் புகழ்ந்து தலையங்கம் எழுதியுள்ள பிரபல தமிழ்ச்சஞ்சிகையான குமுதம் அந்த முன் உதாரணத்தைப் பின்பற்றி தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியும் நடக்கவேண்டும் என எழுதியுள்ளது. இப்படியான ஒரு நிலையில் ராஜீவ்காந்தியினதும், பத்மநாபாவினதும் கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களுக்குச் சார்பாகவாதாடத்திராவிடக்கழகத்தலைவர் எடுத்தமுடிவுமிகவும் கஷ்டமானதென்பது தெளிவாகின்றது.

இந்த விடயத்தில் திரு. வீரமணி மௌனம்சாதிப்பதற்காக ஜெயலலிதா அவருக்கு லஞ்சம் கொடுத்ததாக தீவிரவாதத் தமிழ் தேசியவாதிகள் குற்றஞ் சுமத்துவதாக நவம்பர் மாதத்தில் வெளியான ''கேடயம்'' என்னும் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது: ஒரு வெறும் இராணுவ அமைப்பாக விடுதலைப் புலிகளைக் கருதிய இந்தியா, தான் நினைத்த தீர்வை அவர்களை ஏற்கும்படி நெருக்குதல் கொடுத்துத் தனது பிராந்திய வல்லாதிக்கத்தை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகப் பல நெருக்கடிகள் எழத்தொடங்கின. இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திரு.டீ.பீ. விஜேதுங்க அவர்களும் விடுதலைப்புலிகளை ஒரு இராணுவ அமைப்பாகவே கருதி அவர்களைஅழித்து விடலாம் என நினைக்கின்றார். பரந்த தமிழ் தேசிய வாதத்தை மக்களிடையே பரவச் செய்வதன் மூலம் தாங்கள் மீண்டும் எழுச்சிபெற முடியுமென விடுதலைப்புலிகள் நம்புகின்றார்கள். பரந்த தமிழ் தேசியவாத சித்தாந்தத்தை விரிவாக ஆராய்ந்து பார்ப்பது நன்மை பயப்பதாக விருக்கும்.

### பண்பாடு

விடுதலைப்புலிகள் 1990 க்குப் பின்னர் நடாத்திய முத்தமிழ் விழாவும் மாவீரர் தினமும் அவர்களுடைய பண்பாட்டிற்கு சிறப்படையாளங்களாக விளங்குகின்றன. முத்தமிழ் விழா தமிழ்மொழிக்கு மதிப்பளிக்குமுகமாகவும், மாவீரர் தினம் ஈழப்போரில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கு மதிப்பளிக்கு முகமாகவும் கொண்டாடப்பட்டன. விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேரடியாகவே இவ்விழாக்களில்பங்கு பற்றிச் சிறப்பித்ததன் மூலம் இவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மொழியிலுள்ள சமஸ்கிருத, பாளி மற்றும் ஆங்கிலச் சொற்களை நீக்கி தூய தமிழ் உபயோகத்தை மக்களிடையே ஊக்குவிப்பதுடன் தமிழர்களின் பண்பாடு வீரஞ்செறிந்த ஒன்றாக அமையவேண்டுமென்பதில் விடுதலைப்புலிகள் கண்ணாயிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளால்கட்டியெழுப்பப்பட்டுவரும் இந்தக் கொள்கைகளும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரந்த தமிழ் தேசிய வாதம் கட்டியெழுப்பட்ட போது வைக்கப் பட்ட கொள்கைகளும் ஒன்றோடொன்றுஒத்திருக்கின்றன இந்தச் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டே திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக்கழகம் அண்ணா, தி.மு.கழகம் ஆகியவை உருவாகின. ஆரியமொழியினதும், மற்ற எந்த மொழியினதும் கலப்புகள் இல்லாது ஒரு தனித்துவமான சிறந்த மொழியாத் தமிழ் விளங்க வேண்டுமென்ற சிந்தனையே திராவிட இயக்கம் தோன்றக்காரணமாயிருந்தது.

தமிழர்களுக்கும் ஆரியப்பிராமணர்களுக்குமிடையே நடைபெற்ற சச்சரவுகளுடன் தமிழர்களுடைய வரலாறு பின்னிப்பிணைந்துள்ளதைக் காண முடிகிறது. ஆரியப்பிராமணர்களின் செல்வாக்குக் கலவாத தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் இருந்திருக்கிறதென்றும் அவற்றை மீண்டும் உன்னத நிலைக்குக்கொண்டுவர வேண்டுமென்ற நோக்கம் காரணமாகவே மறைமலை அடிகள் தனித் தமிழ் இயக்கத்தை ஆரம்பித்தார். சென்னைராஜ்யத்தில் தங்கள் விகிதாசாரத்துக்குக் கொடுக்கப்பட வேண்டியதைவிட மிகவும் கூடுதலான பதவிகளையும் செல்வாக்கையும்வகித்து வந்தபிராமணர்களுக்கு எதிரான செல்வாக்குப்படைத்த பிராமணர் அல்லாதார் மறைமலை அடிகளுடைய கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

அங்கிளிக்கன் திருச்சபையைச் சேர்ந்த கால்டுவல் (Robert Caldwell) பாதிரியார் தான் வெளியிட்ட திராவிட மொழிகள் பற்றிய ஒப்பீட்டு இலக்கணநூலில் தமிழ்மொழியிலுள்ள சமஸ்கிருதக் கலப்பை முற்றாக நீக்கிவிடலாமென்றும், அதைச் செய்வதால் தமிழ் மொழி தூய்மையடைந்து மேலும் மேன்மையடையுமென்றும், பேச்சு மொழியில் இருப்பதிலும் பார்க்க குறைந்தளவு சமஸ்கிருதச் சொற்களே தமிழ் இலக்கியத்தில் கலந்திருப்பதாகவும் கூறியிருக்கின்றார். இவரே திராவிடச் சித்தாந்தத்தினதும், தூய தமிழ் நடைமுறையினதும் எழுச்சிக்கு வித்திட்டவராவர். ஒரு காலத்தில் பிராமண புத்திஜீவிகளின் மேலாதிக்கத்திலிருந்த இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் விழிப்படைந்த பிரித்தானியர்களால் தூண்டப்பட்டே பல தமிழ்க் கல்விமான்கள் திராவிட மொழியினதும் அதன் பண்பாட்டின் தனித்துவம்பற்றியும்எழுதியுள்ளார்கள்

மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இலக்கியமும் தென்னிந்திய சுதந்திர கூட்டிணைப்பும் (south Indian Liberal Federation) 1916 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டன. பிரித்தானியர்களின் மேற்பார்வையின் கீழ் தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளும் வகையில் தங்களுக்கென ஒரு அரசை உருவாக்க வேண்டுமென இவ்விரு அமைப்புக்களின் தலைவர்களும் பகிரங்கமாகத் தெரிவித்தனர். தமிழ்மொழியினுடைய பண்டைய பெருமையைக் கண்டறிவதற்கான அரசியற் சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தென்னிந்திய சுதந்திரக் கூட்டிணைப்பு காங்கிரசையும், திராவிடர் கழகம் காங்கிரசையும் இந்தி மொழியையும், இந்து சமயத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசையும் பிராமணர்களின் இந்து சமயத்தையும் எதிர்த்து ஒருவரோடொருவர் முரண்பட்டுக் கொண்டும் அதனுடைய பண்டைய பெருமையைக் கண்டறிய முயன்றனர். அப்பெருமை என்ன? (தொடரும்)

இதோ!
மக்களுக்கோர் நற்செய்தி!

சகல அச்சு வேலைகளுக்கும்
பிரசித்தி பெற்ற நிறுவனம்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்

❀ அழகு மிளிரும் வர்ணவேலைகளா
❀ ஆங்கிலம் தமிழ் புத்தக வேலைகளா

தங்கள் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய
நாடுங்கள்!

நியூ ஈரா பப்ளிகேசன்ஸ்
New Era Publications
267, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
இ/3

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 7-6-1952 | மரணம் 16-1-1988

## மொட்டை நாதன்

(கனகலிங்கம் நாதன்)

சகோதரனே மகனே நீ மடிந்து நான்கு ஆண்டுகள்
சென்றாலும் உனது நினைவுகள் எம்மைவிட்டுச் செல்லாது

இங்ஙனம்
இணுவில் மேற்கு (2105) தாய், சகோதரிகள்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07 - 11 - 1972 | மறைவு 17 - 12 - 1991

## செல்வி தர்சினி சர்வானந்தா

(யாழ் / வேம்படி மகளிர் வித்தியாலய
க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவி)

மாதவம் செய்துன்னைப் பெற்றெடுத்தோம்
மாண்புற வாழ வைக்க கனவு கண்டோம் ..
மணமகளாய் காண்பதற் கெண்ணியிருந்தோம்
பிணமகளாய் காணவென்ன பாவம் செய்தோம்?

குலமகளாய் வாழ்ந்து ஒளி ஈய்ந்தவளே இனி
குறைதானே எம் வாழ்வெல்லாம் நீ போனபின்
முறைதானோ? பாதியில் நீ போனதும் - இனி
மூவுலகம் இருந்தென்ன போயென்ன
மறவோம் .. அம்மா உன் நினைவை என்றும்
மறுபடியும் பிறந்து மகளாய் வந்திடம்மா ..

திருமகள் இல்லம்
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(சி 3794)

அன்பு அப்பா, அம்மா,
அருமைத்தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்

# சோவியத் பிளவுற்றதினால் அணுஆயுதநாடு அதிகரிப்பு

**- டிக்ஷெனி**

முன்னாள் சோவியத் விஞ்ஞானிகளை அபாயகரமான நாடுகள் தமது நாடுகளில் அமர்த்திக் கொள்ளும் அச்சம் நிலவுவதாக அரச முறைப் பயணம் ஒன்றைமேற்கொண்டு ஜெர்மனி வந்திருக்கும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்ஷெனி எச்சரித்தார்.

சோவியத் ஒன்றியம் கலைந்து போனதன் பின்னர் உலகில் அணுகுண்டு வைத்திருக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் அமெரிக்கா ஏவுகணை எதிர் ஆயுதத் திட்டம் மற்றும் நட்சத்திரப் போர்த் திட்டம் ஆகியவற்றில் தொடர்ந்தும் ஈடுபடும் என்று அவர் குறிப்பிட்டார்.

உலகில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான கெடுபிடியுத்தம் ஒரு முடிவுக்கு வந்தாலும், ஐரோப்பாவில் அமெரிக்க இராணுவம் இருப்பதும் ஆசியாவில் அமெரிக்க தளங்கள் இருப்பதும் மிகவும் பொருத்தமானதென்று டிக்ஷெனி கூறினார்.

முன்னால் ஜேர்மன் ஜனாதிபதி ஹெல்மட் ஹோலைச் சந்தித்த பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில் டிக்ஷெனி மேற்கண்டவாறு கூறினார்.

# காரைநகரில் வீடுகள் இராணுவத்தால் தரைமட்டம்

காரைநகரில் பொதுமக்களின் வீடுகள் சிறிலங்கா இராணுவத்தால் தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளதாகவும், பல நோய்வாய்ப்பட்ட வயோதிகர்கள் மருத்துவ வசதியின்றி அவதிப்படுவதாகவும். படையினரின் கட்டுப்பாட்டுடனே நடமாடவேண்டியிருப்பதாக சென்ற திங்கட்கிழமை காரைநகரில் இருந்து யாழ். செஞ்சிலுவை சங்க உதவியுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்த வே. பொன்னம்மா (வயது 63) என்றவயோதிபர்தெரிவித்தார் இவர்நேற்றுமுன்தினம்சுகவீன காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (43]

## யாழ். தொலைத்தொடர்பு

# முப்பது ஊழியர்களின் சம்பளம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாண தொலைத் தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த 30 ஊழியர்களுக்கு இம்மாதம் தொடக்கம் அவர்களது சம்பளம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்படி ஊழியர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். ஆனால் போக்குவரத்து நிலைமைகளைக் காரணம் காட்டி தமதுமாற்றத்தை ரத்துச் செய்யும்படி தலைமை அலுவலகத்திற்கு மனுச் செய்திருந்தனர்.

அம்மனு தொடர்பாகதலைமையகத்திலிருந்து எதுவித பதிலும் கிடைக்காத போதிலும் உரிய இடங்களுக்கு பணியாற்ற செல்லாவிடில் எதுவித அறிவித்தலுமின்றி இம்மாதம் சம்பளம் இடை நிறுத்தி வைக்கப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

யாழ். தொலைத்தொடர்பு திணைக்களத்தில் நூற்றுக்கு மதிகமானோர் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரபாவின்

யைக்கேட்டுள்ளார். இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சர் எஸ். தொண்டமான் முன் வைத்துள்ள திட்டம் உண்மையில் பிரபாகரனின் திட்டமாகும், இதை அமுல்படுத்தினால் நாட்டில் பெருமழிவும் இரத்தக்களரியும் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனாதிபதியைவிட அதிக பலம் வாய்ந்தவர் போல் தெரிகிறது. பயங்கரவாதக் குழுக்கள் மலையகத்தில் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற தகவலை அடுத்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் இறங்கியதும் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்த நடவடிக்கையில் இறங்கியது. தொண்டமானைத் தவிர வேறு எந்த அமைச்சரும் தனக்குக் கீழ் இயங்கும் தொழிற் சங்கத்தை வேலை நிறுத்தம் செய்ய அனுமதிக்க மாட்டார். இந்தச்சம்பவம் தொண்டமானின் பலத்தையே காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்

தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைக் கண்டித்து கிரிபத்கொடவில் சிங்கள மகா சமாத்தபூமிபுத்ரா கட்சி நடத்திய கூட்டத்தில் உரையாற்றும்போது வண. ரட்ணசார மேற்கண்டவாறு தெரிவித்தார்

### தொண்டமானின்

நாட்டில் இது ஏன் சாத்தியப்படவில்லை என்பதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை என்றார்.

கல்தாரி மெரிடியன் ஹோட்டலில் நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் எஸ். தொண்டமான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### சமாதான

பணித்துள்ளவர்களுக்கு இந்த நாட்டை உண்மையாகவே நேசிக்கும் மக்களும், நாடும் தமது மனப்பூர்வமான ஆதரவை வழங்கவேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற முயற்சி உத்தியோகபூர்வமாக அல்லது உத்தியோகபூர்வமற்ற முறையிலும் மேற்கொள்ளப்படலாம். வழி எதுவாயினும், அதற்கு நாம் ஆதரவு வழங்கவேண்டும்.

இவ்வாறு திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆயர் வண. கே. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை திருக்கோணமலை புனித. யோசப் கல்லூரியில் இடம் பெற்ற கறோல் ஒன்றுகூடல் நிகழ்வில் வெளியிட்ட செய்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கிலும் கிழக்கிலும் மக்களைத் துன்பங்களுக்கு உள்ளாக்கிய யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை மீளவும் நிலைநாட்டுவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

1991 இல் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் பல சவால்களைச் சந்தித்துள்ளோம். 1992 ஆம் ஆண்டுக்கான எதிர்பார்ப்புகள் மக்களின் பொறுப்புணர்விலும், மனோதிடத்திலும் தங்கியுள்ளது. சமயப் பெறுமானங்கள் சமூகங்கள், சமூகப் பிரிவுகள் மத்தியிலும் புகட்டப்பட வேண்டும்.

1992 இல் குடாநாட்டில் சமாதானம், நீதி, ஐக்கியம் ஏற்பட்டு எல்லா இன மக்களும் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் போல் வாழவேண்டும் என்பது எனது ஆசையும், பிரார்த்தனையுமாகும் என்றும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

### வாகன

சேர்ந்த றொபேட் ஜோன்சன் (23) விஜிதரன் (5) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் (34) ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிறுமி மதுரை (5) ஆகியோரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டவர்களாவர். (ச,க)

### மீனவர்

இடத்தில் பாய்மர வள்ளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஆறு மீனவர்களை நோக்கி மன்னித்தலை பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனைத் தொடர்ந்து அங்கே மீன் பிடித்துக்கொண்டிருந்த ஐந்து மீனவர்களும் கடலில் குதித்து தப்பிக்கொண்டனர். இவ்வேளை குருநகரைச் சேர்ந்த ஈக்மன் (15) என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

இவரது கழுத்துப் பகுதியை துப்பாக்கிக் குண்டு துளைத்துச் சென்றுள்ளது. இவர் தற்போது ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை தைப்பொங்கல் தினமான நேற்று இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதாக அரசு தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலையத்தினரால் நடாத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, சில அசௌகரிய காரணங்களினால் எதிர்வரும் 15-02-92 அன்று பிற்போடப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

(2103) -நிர்வாகிகள்

...வித்தல்

...ப் போல் ஒரு சில
...லும் குறைந்த போலி
... செய்வதாக அறிய
... பீடியின் விலையில்

...ஆர். வி. ஜி. பீடி விற்
...டு எமக்குத் தகவல்
...களை அன்புடன்
...ற்பனையாளர் பற்றிய

...வர்களுக்கு
...ங்கப்படும்.

...நிர்வாகம்
...தி,
...பாணம்.

(2099)


...கின்றோம்



...த்தில் உருத்திரபுரம்
...லங்காப் படையினரின்
...ய்திய

...ப்ஸ் (கிருஷ்ணர்
...காங்கேசன்துறை)
...ாந்தன் - கிளிநொச்சி)
... - ஜெயந்திநகர்.
கிளிநொச்சி)

... 3 பொதுமக்கள்
...வில் இந்தியப்படை
...ரச்சாவெய்திய

...ணநாதன் - 8ஆம் வட்
... திருக்கோணமலை)
...னரால் கைது செய்
...த்துக் கொலை செய்
...ான

...ங்கம் புஷ்பநாதன்
...ன் வீதி, இணுவில்)

...ததியில் இந்தியப்
...டு உடுப்பிட்டி முகாமில்
...ாமல்போன தமிழ்

...பாப் பகுதியில் சிறி
...ற்பட்ட மோதலில்

...ணன் - திருக்கடலூர்
... திருக்கோணமலை)

...திர்பாராத விதமாக
...ப்பிரிந்த அம்பாறை
...ாறுப்பாளர்

...கனம் ரூபானந்தராசா
...த்துவில், அம்பாறை)

...த்தம்பி சுவேந்திரராசா
...ந்துவில், அம்பாறை)

...நாளில்
...கின்றோம்

...புலிகள்
...முன்னணி

(சி/3790)



## ❋ சிந்தனைக்கு ❋

உலக மோகத்தை மனிதர் அழித்து
மாய்க்காவிடில், உலக மோகம்,
மனிதரை அழித்து மாய்த்து விடும்.
- ரால்ப் வென்னிங்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# பாகிஸ்தானை தாக்க அமெரி. முடியுமா?

துருக்கியில் இருந்து பாகிஸ்தான் வரை அணு ஆயுத இஸ்லாமிய நாடுகள் சம்மேளனம் ஒன்று உருவாக்கப்படலாம் என அமெரிக்க செனட்டர் லார்றி பிரெஸ்லெர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி உட்பட முன்னாள் சோவியத்யூனியன் ஐந்து இஸ்லாமியக் குடியரசுகளும் இணைந்து இச் சம்மேளனம் உருவாகலாமென்றும், அவ்வாறு உருவாகும் பட்சத்தில் அவை உலகிலேயே பிரமாண்டமான சக்தியாகி விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு அணுகுண்டைத் தயாரித்துவிட வேண்டும் என இஸ்லாமிய உலகம் இன்றல்ல, சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக முயற்சித்து வருகின்றது. இது இஸ்லாமிய உலகத்தின் தலைமை யாருடையது என்பதைத் தீர்மானிக்கும் விடயமாகையால் எகிப்து, சிரியா, லிபியா, ஈராக், ஈரான், பாகிஸ்தான் உட்பட அநேக இஸ்லாமிய நாடுகள் இதில் தீவிர கவனம் செலுத்தின.

இதில் எகிப்திய முன்னாள் அதிபர் நாசர் தொடக்கம் தற்போதைய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் வரை தோல்வி கண்டனர். இவர்களின் தோல்விக்கு அமெரிக்கா பெரும் பங்காற்றியது. கெடுபிடியுத்த காலத்தின் மத்திய கிழக்குச் சண்டியனான இஸ்ரேலின் உதவியுடன் அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளின் அணுவாயுத திட்டங்களைத் தகர்த்தெறிந்தது. இறுதியில்- கெடுபிடியுத்தத்தின் முடிவில்- நேரடியாக தலையிட்டு ஈராக்கின் அணுவாயுத ஆற்றலை அமெரிக்கா அழித்தது.

இந்த நிலையில், தற்பொழுது பாகிஸ்தான் அணுவாயுதத்தை உற்பத்தி செய்துள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நிழலிலேயே நின்று பாகிஸ்தான் வெற்றிகரமாக இதனைச் சாதித்துள்ளது. அத்தோடு முன்னாள் சோவியத் குடியரசுகளாக இருந்த சில இஸ்லாமிய நாடுகளும் அணுவாயுதத்தையும், அதைத்தயாரிப்பதற்கானயுரேனியத்தையும், தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளன. அதாவது இதுவரை அணுகுண்டிற்காக ஏங்கிக் கிடந்தஇஸ்லாமிய உலகம் அணுவாயுத வல்லமையைத் தற்பொழுது பெற்றுள்ளது.

ஆனால், இன்று உருவாகியுள்ள புதிய சூழ்நிலை அமெரிக்கா கடந்த காலத்தில் மேற்கொண்ட தகர்த்தெறியும் திட்டங்களை மேற்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே.

உலகின் புதிய அரசியல் ஒழுங்கை நிலை நிறுத்த முன்நிற்கும் அமெரிக்கா, ஈராக்கைத் தண்டித்தது போல் திட்டவட்டமாக பாகிஸ்தானைத் தனித்துவமாக அழித்துவிட முடியாது. அதேபோல் அணுவாயுத வல்லமை பெற்ற ஏனைய தீவிர இஸ்லாமிய அடிப்படைவாத அணுவாயுத நாடுகளையும் தண்டிக்க முற்பட்டால் விளைவுகள் பாரதூரமாகலாம்.

இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து ஆபிரிக்காவின்மேற்கு கரை வரைபரந்துள்ள இஸ்லாமிய உலகம் வளைகுடா யுத்தத்தில் செயற்பட்டது போன்று அமெரிக்காவின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்கும் எனவும் எதிர்பார்க்க முடியாது. ஆகையினால் அமெரிக்காவின் புதிய சர்வதேச ஒழுங்கிலும், இவற்றிற்கான அணுகுமுறை இல்லாமல் இருக்கவும் முடியாது.

# 44 மிராஜ் போ... பாக். கொள்...

(இஸ்லாமாபாத்)

மிராஜ் - 2000 ரகத்தைச் சேர்ந்த 44 போர் விமானங்களை வாங்குவதற்கான பேரம் ஒன்றில் பிரான்ஸ் நாட்டுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதை பாகிஸ்தான் பிரதமர் திரு நவாப் ஷெரீப் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

பிரான்சில் ஆறுநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு புறப்படுவதற்கு முன்னதாக நேற்று முன்தினம் பிரான்சின் செய்தி ஏஜென்சி ஒன்றிடம் பேசிய திரு. ஷெரீப் 1978 ஆம் ஆண்டு அணு ஆயுத பேரம் ஒன்று ரத்துச் செய்யப்பட்டது தொடர்பாக பிரான்சுடன் இருந்து வந்த 13 வருடகால பிரச்சினைக்கு தீர்வு காணப் பட்டுவிட்டது என்றும் இதற்கான ஈட்டுத்

தொகையா... இருந்து 1... சம் கிடை... வித்தார்.

இந்தத்... பிரான்சுட... கருவிகளின்... பயன்படுத்... திரு ஷெரீ...

# சதாமைக் 5000 இறாத்தல் கு...

(வாஷிங்டன்)

வளைகுடா யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் அமெரிக்கா சதாம் ஹுசைனைக் கொல்லும் பொருட்டு அவரது பலம் வாய்ந்த பாதுகாப்பு அரணுக்கு குண்டு வீசமுயன்றது என்றும் இதற்காக குறி தவறாமல் செல்லக் கூடிய இருகுண்டுகள் தயாரிக்கப்பட்டன என்றும், ''யு. எஸ். நியூஸ் அன் வேர்ல்ட் ரிப்போர்ட்'' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி யுத்தம் முடிய சில மணி நேரத்துக்கு முன் 5000 இறாத்தல் நிறை கொண்ட விசேட குண்டுகளை இரு விமானப்படை விமானங்கள் பாக்தாத்துக்கு வடமேற்கேயுள்ள அல் - டாஜி விமானத் தள அரணில் போட்டன என்றும், சதாம் அங்கு தங்கியிருக்கிறார் என்ற ஊகத்திலேயே அவை போடப்பட்டன என்றும் பிரஸ்தாப சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஆனால் யுத்தத்தில் சதாம் தங்கள் இலக்காக இருக்கவில்லை எனவும் வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்வதற்கான தடைச்சட்டம் 16 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அமெரிக்கா இந்த விதி

...யைக் கடு... பிடித்து வ... ரிக்க நிர்வ... அமைச்சு ... மேற்படி ... துள்ளது.

# மன்... உட...

மன்னார்... ருந்து இட... ளம் மாவ... தங்கியிருக்... களும் கடற்... மன்னாருக்... வேண்டும்...

# கொ...

# ஊர்க... உட...

ஊர்காவ... தந்தி ஊ... யாக ஊர்க... நிலையத்தி... சமுகமளிக்... பட்டுள்ளா... யட்சகர் ... தில் ஊர்கா... காப்புப் ... அங்கு செல்... யைப் பெ...

# தைவ...

(...

தைவான... இலங்கைய... பாதுகாப்பி... ளதாகச் ... கொழும்பி... வர்த்தக ... மூடியதற்கு...

## ஒலிம்பிக் அணியில்

# தீபிகாவிற்கு இடமி... தவறுதலாக நிகழ்...

(கொழும்பு)

ஸ்பெயினின் பார்ஸிலோனா நகரில் இவ்வருடம் இடம்பெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்ளும்அணியில் நீச்சல்வீரர் ஜூலியன்போலிங் நீச்சல் வீராங்கனை தீபிகா ஆகிய இருவருக்கும் இடமில்லாமல் போனது ஒரு 'தவறு' என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ தெரிவித்தார்.

இப்படியான ஒரு 'ஒலிம்பியன் தவறு' எவ்வாறு நிகழ்ந்தது என்று விளையாட்டுத் துறை வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவிக்கின்றன. இரு வாரங்களுக்கு முன்பு பிரபல்யமாக அடிபட்ட இந்தப் பெயர்கள் இரண்டினையும் தேசிய தெரிவுக்குழு எப்படி மறந்தது என்றும் கேட்கப்படுகின்றது.

சிறிலங்கா அணியில் இவர்கள் பெயர் விடுபட்டது ஞாபகக்குறைவால் அல்ல. இருவரும் ஏசியன் கேம்ஸ் அல்லது ஒலிம்பிக் தரத்தை அடையவில்லை என்று தேசியதெரிவுக் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஐலன்ட் செய்தியாளரிடம் தெரிவித்தார். அப்படியா...

...னால் சிறி... அங்கம் வ... ஏசியன்கே... பிக் தரத்... களா என... படுகிறது.

# '... விசா...

எயர் லா... விமானம் ... சென்னை... தில் தரை... தொடர்ப... நடைபெறு...

நிதி அ... ஆர். பா... குற்றப் பு... அதிகாரி ... உட்பட... அந்த விம... செய்தனர்...

எயர் ல... அதிகாரிக... வேலை ... என்று தெ... கிய உயர்... இருவர் ... ணத்தால்...

கொக்கட்டிச்சோலை படுகொலை

# ஆணைக்குழு விசாரணையை இராணுவம் புறக்கணிப்பு

கொக்கட்டிச்சோலை சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பு சாட்சியமளிக்க சிறிலங்காப் படையினர் மறுத்துவிட்டார்கள்.

சிறிலங்காப் படையினர் கொக்கட்டிச்சோலையில் கடந்த வருடம் ஜூன்மாதம் மேற்கொண்ட படுகொலைகள் இழப்புகள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன் பாதிப்புக்குள்ளானவர்கள் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் குமார் பொன்னம்பலம் இந்த இராணுவ வீரர்கள் சாட்சியமளிக்கவில்லையானால் இந்த விசாரணையின் நோக்கமே பயனற்றுப் போய்விடும் என்றார்.

விசாரணைக் குழுவின்முன் நேற்றுமுன்தினம் சமுகமளிக்கும்படி 21 இராணுவத்தினருக்குக் கட்டளை அனுப்பப்பட்டது. 17 பேர் மட்டுமே குழுவின்முன் தோன்றினார்கள். இவர்கள் அனைவரும் சாட்சியமளிக்க மறுத்துவிட்டனர்.

மட்டக்களப்பு இராணுவ முகாம் ஒன்றுக்குப் பொறுப்பதிகாரியாகஇருந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் சத்தியப் பிரமாணம் செய்யாத வாக்குமூலத்தை வழங்கியுள்ளார். எனவே வழக்கறிஞர்கள் இவரைக் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் போய்விட்டது.

குமார் பொன்னம்பலம் விசாரணை செய்ய இன்னொரு இராணுவ அதிகாரியை அழைக்க முயற்சிஎடுத்து அதில் வெற்றிபெற்றாலன்றி இந்த விசாரணை இன்றுடன் முடிந்துவிடும்என்று சொல்லப்படுகிறது.

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக இராணுவ அதிகாரிமீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யக் கூடிய வாய்ப்புகள் இருப்பதால் அந்தக் காரணத்துக்காக கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுக்குமாறு இவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக இராணுவத்தினர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

இந்த நிலைப்பாட்டை சிரேஷ்ட வழக்கறிஞர் குமார் பொன்னம்பலம் வன்மையாக ஆட்சேபித்தார்.

இராணுவத்தினரின் இந்த நிலைப்பாட்டைத் தாம் தீர்ப்பு வழங்கும்போது கவனத்தில் எடுத்துக் கொள்வதாக விசாரணைக் குழுவின் மூன்று உறுப்பினர்களும் தெளிவாகக் கூறியுள்ளனர்.

அடுத்த மாதம் தமது வருடாந்தக் கூட்டத்தை நடத்தவிருக்கும் சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளும் விசாரணைக் குழுவின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றன. சிறிலங்கா பாரிய அளவு நிதி உதவி கோரியிருப்பதால், மனித உரிமைகள் விடயம் தொடர்பாக முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

மேற்படி விசாரணைக் குழுவின் அறிக்கை இந்த மாதம் வெளியிடப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகாரஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஏலவே தெரிவித்திருந்தார்.

## இல. வங்கி

வரும் தமிழர் 48பேரும்முஸ்லிம்கள்22 பேரும்நியமனம் பெற்றுள்ளனர். இனவிகிதாசாரப்படி பார்த்தால் சிங்களவர் 389, தமிழர் 63, முஸ்லிம்கள் 41 இந்திய வம்சாவளித்தமிழர் 25 பேரும் நியமிக்கப்படல் வேண்டும். ஆகையினால் இலங்கை வங்கியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி நியமனங்களைக் கருத்திற்கொண்டு இனவிகிதாசார முறையை கடைப்பிடிக்க உப்தரவிடுமாறு அதில் கேட்கத்பட்டுள்ளது.

## மலையக

கலந்துகொண்ட விசேட மாநாடு ஒன்று அவசரமாகக் கூட்டப்பட்டது. இம்மாநாட்டிலேயே இராணுவத்தை வரவழைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

மலைகத்தில் அடர்ந்த காட்டுப் பகுதிகளான நமுனுகல' எல்ல ஆகிய இடங்களிலும் சல்லடை போட்டு தேடுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. இக்காட்டுப்பகுதி ஊடாகவே கொள்ளையர்கள் வந்திருக்கலாம் என்று பொலிசார் நம்புகின்றனர்.

கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தோட்டப் பகுதியை விட்டு தப்பிச்சென்றிருக்க முடியாது என்று கருதப்படுவதால் எல்ல பகுதியில் உள்ளவர்கள் அனைவரும் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை பதுளை பிரதி பொலிஸ்மா அதிபர் டெலி அமரசேகர மேற்படி கொலை கொள்ளை தொடர்பாக இதுவரைஎவரும் கைதாகவில்லை எனவும் இச்சம்பவம் பற்றிய துப்பு இன்று அல்லது நாளை துலங்கி விடும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை இக்கொள்ளைச் சம்பவத்தின் போது அல்டி மாக்ஸ் - 100 என்ற பெயர்கொண்ட புதியரக ஆயுதம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளுக்கு எதிராக கிழக்கில் புதிய நடவடிக்கை

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக 'லங்கா புவத்' தெரிவித்துள்ளது. வெலிகந்த, வடமுனை, தொப்பிகல ஆகிய பகுதிகளில் பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்களக் கிராமங்களை தாக்குவதன் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள சிறிலங்கா இராணுவத்தின் கவனத்தை திசை திருப்ப புலிகள் திட்டமிட்டு வருவதாகவும் இதனை முறியடிக்க சிறிலங்கா இராணுவத்தினர் முயற்சி செய்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான

விடுதலைப் புலிகள் தற்போது பலவீனமான நிலையில் உள்ளார்கள் என்றும், இந்திய மத்திய அரசும் தமிழ்நாட்டு அரசும் கூட்டாகச் சேர்ந்து எடுக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளால் புலிகள் இயக்கம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளதாகவும் சிங்கள இராணுவத் தலைமைபீடம் கருதுகிறது. எனவே விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் அழிப்பது இதுவே தகுந்த தருணம் என்றும் இந்த சூழ்நிலையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது புலிகளுக்கு புத்துயிர் அளிக்க வாய்ப்பினை ஏற்படுத்துமெனவும் இராணுவம் உறுதியாக நம்புகிறது. எனவே, போர் நடவடிக்கைகளை தீவிரமாக்கி புலிகளை நசுக்கிவிட்டு அதன் பின்னரே பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென இராணுவத் தளபதிகள் வற்புறுத்திவருவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இது ஒருபுறமிருக்க திரு தொண்டமானின் தீர்வுத்திட்டமும், புலிகளுடன் அவர் பேச்சுக்களை நடாத்த தீர்மானித்திருப்பதும் என்றுமிலலாதபடி சிங்கள இனவாத எழுச்சியை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. இந்தப் பேரினவாத எழுச்சிக்கு சிங்கள பௌத்த பீடம் தலைமை வகிப்பதும், சிங்கள எதிர்க்கட்சிகளும் இதில் அணிசேர்ந்திருப்பதும் பிரேமதாசா அரசுக்கு ஒரு பெரிய நெருக்கடியாக உருவகம் பெற்றிருக்கிறது. இந்த எதிர்ப்பு அலைகளுக்கு பயந்த சிறிலங்கா அரசு தொண்டமானின் சமரச முயற்சிக்கு ஆதரவு கொடுக்காமல் ஒதுங்கிக்கொண்டது.

திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் வடகிழக்கு மாகாணங்களை தமிழர் தாயகமாக அங்கீகரிப்பதாலும் வடகிழக்கிலுள்ள விமான நிலையங்களையும், கடற்படைத் தளங்களையும், திருக்கோணமலைத் துறைமுகத்தையும் தமிழரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர அனுமதிப்பதிலும், சிங்கள இனவாத சக்திகள் இத்திட்டத்தை முழு மூச்சாக எதிர்க்கிறார்கள். ஆளும் கட்சியினர் மத்தியிலும் இத்திட்டத்திற்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது இந்த எதிர்ப்புக்களை எல்லாம் சமாளிப்பதோடு, இராணுவவாதிகளையும் திருப்திப்படுத்துவதாயின் தொண்டமானின் சமாதான முயற்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு எழுந்திருக்கிறது. எனவேதான் பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமாக இப்படியானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தென்னிலங்கையில் தலைவிரித்தாடும் பேரினவாதம், மலையகத்தில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமை, பாராளுமன்ற தெரிவுக் குழுவின் வாய்ப்பூட்டு- இவை காரணமாக திரு. தொண்டமான் தனது சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து யாழ்ப்பாண விஜயத்தையும் கைவிடலாமெனவும் இந்த அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## திடீர்

தெரியவருவதாவது தீவகப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம் பெயர்ந்து நாவற்குளி அகதி முகாமில் தங்கியிருந்த த. அஜந்தினி (வயது 7) என்ற சிறுமிக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டது. இதனைக் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள தனியார் வைத்திய சாலைஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பின் அங்கிருந்து யாழ் போதனா வைத்திய சாலைக்கு அழைத்து வரப்பட்ட போது இடை வழியில் மரணமானார்.

இவரதுமரணம் தொடர்பான விசாரணை நேற்றுயாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றபின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைகப்பட்டது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பௌத்த இளைஞ
தொண்டா திட்ட
(கண்டி
கண்டி பௌத்த இளை
பிரச்சினைக்கான அமைச்ச
மன் சமர்ப்பித்த தீர்வுத்
கரிப்பதென ஏகமனதாகத்
தொண்டமானின் தீ
பிரச்சினையை மேலும்
நாட்டின் ஒருமைப்பாட்டி
கும் ஊறு விளைவிக்கும் எ
இளைஞர் சங்கம் அண்மை
கூட்டத்தில் ஏகமனதாகத்
நிறைவேற்றியுள்ளது.

தேவைக்கேற்
நரசிம்மராவ் ஆ
(டில்லி
ஒவ்வொரு நடும் தம
சமஷ்டி அடிப்படையை வ
வேண்டுமென இந்தியப்பிர
ராவ் தெரிவித்துள்ளார்.
அவரது இல்லத்தில்
டிக் கொள்கை' என்னும் பு
போது அவர் இதனைத்
நாட்டுக்கு வலுவான
மத்திய மாநில அரசுகளுக்
நிலையை பராமரிக்க வேண்
மாநிலங்களுடன் நீக்குப்
கையை கடைப்பிடிக்க வே
வித்தார்.

ஆயுத போராட்டத்
உல்பா தீர்ம
(டில்லி)
அரசியல் சாசனத்தை
போராட்டத்தைக் கைவி
உல்பா எனப்படும் அஸாட
யினர் உறுதியளித்ததைத்
வுக்கு எதிரான இராணுவ
தற்காலிகமாக நிறுத்தப்பே
அரசு நேற்று முன்தினம் அ
டில்லியில் இந்தியப் பி
மராவ், உள்துறை அமை
உல்பா அமைப்பின் ஐந்து
வர்களுடன் நடாத்திய பே
பின் இந்த அறிவிப்பு வெள
அஸாம் சுதந்திரப்
உல்பா கைவிட்டு விட்ட
யோக பூர்வமாக அறிவிக்கு
வதாக அஸாம் முதலமைச்
கியா தெரிவித்தார்.

மரண அறிவி
தம்பையா இரா

யாழ்ப்பாணத்தை
கோண்டாவிலை வசிப்பி
வரும் திருமதி மனோன்
கணவரும், தர்மகுல
யாழ். மத்திய கல்லூரி
கொத்தணி உதவியாளர்
அன்புத் தந்தையுமாகிய
ரத்தினம் 15-01-92இல்
விட்டார். இவர் திருமதி
குலசிங்கம் (ஆசிரியை,
லர் ம.வி.) அவர்களின்
ரும், வித்தியா, யோகச்
ஆகியோரின் அருமைப்
அன்னாரின் பூதவுடல் 1
வியாழக்கிழமை காலை
னக் கிரியைக்காக கோண்
திலிருந்து காரைக்கா
எடுத்துச் செல்லப்படும்
னர்க்கும் நண்பர்களுக்கு
றோம்.

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

துரைராசா - செ
வீரவேங்கை ஜெசிந்
மலர்வு:
1972-10-22

அராலி தெற்கைச் சே
புவனேஸ்வரி அவர்களி
னும், ஜெயரூபி, விஜய
ஜெயச்சித்திரா, கௌச
தன், துஷ்யந்தி ஆகியோ
னும், பொன்னுத்துரை,
லிங்கம், சிவகாமிப்பிள்
அன்புப் பேரனுமாவார்
தலை உற்றார், உற
ஏற்றுக்கொள்ளும்படி
றோம்.

துரைரா
[சி/3795] அரா